**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No.1378/2023**

Deposition of **Addl-1/ PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : கிருஷ்ணவேணி | **Age** | : | 37/2026 |
| **Husband Name** | : குமாரசாமி | **Religion** | : | இந்து |
| **Village** | : போடிநாயக்கனூர் | **Calling** | : | சார்பு ஆய்வாளர் |
| **Taluk** | : போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25/03/2026.**

1. 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் தேவாரம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் தெய்வக்கண்ணன் பணிமாறுதலில் சென்றுவிட்டதாலும், அரசு தரப்பு சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததாலும், சார்பு ஆய்வாளரின் கையொப்பம் நன்கு தெரியும் என்பதாலும், ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 23/06/2023ம் தேதி 17.30 மணிக்கு சார்பு ஆய்வாளர் தெய்வக்கண்ணன் என்பவர் தேவாரம் காவல்நிலைய பொறுப்பில் இருந்தபோது நிலைய மனு எண் 294/2023யை பார்வையிட்டு, நிலைய குற்ற எண்.144/2023 இ.த.ச 427, 294 (b), 323, 506(i)-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3) அதன்பின் 23/06/2023ம் தேதி 18.30 மணிக்கு சம்பவ இடமான சிந்தலைச்சேரியில் உள்ள வாதி குழந்தை தெரசு வீட்டிற்கு சென்று சாட்சிகள் செல்வராஜ் மற்றும் அந்தோணி முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் . மேற்கண்ட சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது)**.

3) அதன்பின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலான நபர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 1, 2 எதிரிகள் உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டதால் கைது செய்யவில்லை. அதன் பின் எதிரிகளுக்கு எதிராக வழக்கு விசாரணையை முடித்து 08/08/2023 ஆம் தேதி பிரிவுகள் இ.த.ச 427, 294 (b), 323, 506(i)–ன் கீழ் குற்றம் என இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

4) நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் கொடுத்த புகாரை சரிவர விசாரிக்காமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை விசாரிக்காமல் ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.03.25 18:12:04 +05'30'

**Judicial Magistrate,**

**Bodinayakanur.**